<u>அசல் வழக்கு எண்.88 /2013</u>

நாள் 25.3.2022

<u>பெயர். எஸ். ரமேஷ் த/பெ. சண்முகம்</u>

<u>நீ.ம.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

இவ்வழக்கு தாவா சொத்துக்களை நான் அசல் வழக்கு எண் 115/2013ல் உள்ள இடைக்கால மனுவின்பேரில் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டேன் அப்போது நான் தாவா சொத்துக்களை அளக்கும் போது அசல் வழக்கு எண்.88/ 2013 நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது அதற்கு பின்பு தான் தெரியும். நான் ராமகிருஷண்ன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் நிர்மலா அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் அதன் சுற்றுபுற சொத்துக்களையும் பார்வையிட்டேன் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 ல் நிர்மலா அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நீல வண்ணத்தில் கோடிட்டு காண்பித்துள்ளேன். மேற்படி நீ.ம.சா.ஆ.2ல் நிர்மலாவுக்கு பாத்தியப்பட்ட சொத்து புல எண்.140 மற்றும் 135/1 இரண்டு சர்வே எண்களுக்கு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2ல் நீலநிறம் இட்ட நிர்மலாவின் சொத்து ஆதியில் சுந்தரமூர்த்தி நாயுடு அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.3ல் சர்வேயர் வரைபடத்தில் சர்வே எண்.140 க்கு மட்டும் நீலநிறம் வண்ணமிட்டுள்ளார் ஆனால் சர்வே எண் 140க்கு தென்மேற்கு பகுதியில் உள்ள சர்வே எண் 135/1ஐ ஒரு பகுதியை காட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளால் நீ. ம. சா.ஆ.2 மற்றும் நீ.ம.சா.ஆ.3க்கு வேறுபாடுகள் உள்ளது என்றால் சரிதான். நான் சர்வேயர் சர்வே எண் 140க்கு தென்மேற்கில் உள்ள சர்வே எண்135/1ல் கிழக்கு மேற்கு 12 அடி வடக்கு தெற்கு 16 அடி சுந்தரமூர்த்தி நாயுடுக்கு பாத்தியப்பட்டது என்று பத்திரப்படி அளந்து காட்டியதால் தான் நீ.ம.சா.ஆ.2 எனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நீமசாஆ.3ல் சர்வேயர் சர்வே எண்.140க்கு தென்மேற்கில் உள்ள சர்வே எண் 135/1ன் ஒரு பகுதியை சுந்தரமூர்த்தி நாயுடுக்கு பாத்தியப்பட்ட இடத்தை காண்பிக்க தவறியதற்கு காரணம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வேயர் வருவாய் ஆவணங்களை வருகிற பெயர்களை நீ.ம.சா.ஆ.3ல் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். சர்வேயர் பத்திரங்களின் அடிப்படையில் நீ.ம.சா.ஆ.3 தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சர்வேயர் பத்திரங்கள்படி தான் அளந்தார் ஆனால் நீ.ம.சா.ஆ.3ல் வரைபடத்தில் காண்பீக்கவில்லை. எனக்கு 17.8.1962 மற்றும் 7.12.1960 தேதியிட்ட இரண்டு கிரய பத்திரங்கள்படி இந்நீதிமன்றம் சொத்துக்களை அளக்க எனக்கு உத்திரவிட்டது

என்றால் சரிதான். 17.8.1962 கிரய பத்திரம் ஆனது வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி பெயரில் உள்ள கிரய பத்திரம் என்றால் சரிதான். 7.12.1960 தேதியிட்ட கிரய பத்திரமானது சுந்தரமூர்த்தி (எ) சுந்தரநாயுடு(எ) ஜெனார்த்தன நாயுடு என்பவர் பெயரில் உள்ள கிரயபத்திரம் என்றால் சரிதான். மேற்படி சுந்தரமூர்த்தி (எ) சுந்தரநாயுடு (எ) ஜெனார்தனன் என்பவர் மைனர் என்பதால் அவர் தந்தையான ஜெயராமன் நாயுடு என்பவர் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவிந்தசாமி பெயரில் உள்ள கிரய பத்திரத்தில் அவர் மூன்று அட்டவணை சொத்துக்களாக கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கோவிந்தசாமி கிரயம் பெற்ற பத்திரத்தில் முதல் அட்டவணையில் 3 அயிட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். முதல் அட்டவணையில் முதல் அயிட்ட சொத்துக்கு தெற்கு புற ஜக்பந்தி எனது அறிக்கையில் சொல்ல தவறி உள்ளேன் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் காண்பித்துள்ளேன் தெற்குபுற ஜக்பந்தி சத்தியமூர்த்தி சாலை ஆகும். அதேபோல் முதல் அட்டவணையில் 2ஆவது அயிட்ட சொத்திற்கு எனது அறிக்கையில் மேற்கு புற ஜக்பந்தியும் சொல்ல தவறி உள்ளேன் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்திலும் மேற்படி மேற்குபுற ஜக்பந்தியை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். முதல் அட்டவணை 3ஆவது அயிட்ட சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு புற ஜக்பந்திகளை அறிக்கை மற்றும் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமி பெயரில் உள்ள முதல் அட்டவணையில் உள்ள 3 அயிட்ட சொத்துக்களுக்கும் ஜக்பந்திகள் பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அறிக்கயில் கோவிந்தசாமி பெயரில் உள்ள முதல் அட்டவணை 3 அயிட்ட சொத்திற்கும் பொதுவான ஜக்பந்தி சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் பழைய ஜக்பந்தியை காண்பித்துள்ளேனா தவிர புதிய ஜக்பந்தியை எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் சொல்லி உள்ளேன். 7.12.1960 தேதியிட்ட கிரய பத்திரத்தில் உள்ள சொத்து அளவுகள் சர்வே எண்.140 மற்றும் 135/1 இரண்டிலும் தொடர்பு கொண்டு வருகிறது என்று சர்வேயர் அளந்து காட்டியதால் தான் எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கோவிந்தசாமி பெயரில் உள்ள கிரய பத்திரத்திலும் மற்றும் சுந்தரநாயுடு (எ) சுந்தரமூர்த்தி (எ) ஜெனார்த்தன நாயுடு அவர் பெயரில் உள்ள பத்திரத்திலும் புல எண்கள் இல்லை என்றால் சரிதான். சுந்தரநாயுடு (எ) சுந்தரமூர்த்தி (எ) ஜெனார்த்தன நாயுடு அவர் பெயரில் உள்ள பத்திரத்தில் சொத்தானது நான்குபுற சுற்று சுவர் கொண்ட காலி இடம் என்றால் சரிதான் அதன் விஸ்தீரணம் கிழக்கு மேற்கு 37 அடி வடக்கு தெற்கு 45 அடி என்றால் சரிதான்.

நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் பச்சைநிய மிட்டு காண்பிக்கப்பட்டுள்ள இடம் சுந்தரநாயுடு (எ) சுந்தரமூர்த்தி (எ) ஜெனார்த்தன நாயுடு பெயரில் உள்ள கிரய பத்திரத்திலும் மற்றும் கோவிந்தசாமி பெயரில் உள்ள கிரய பத்திரத்திங்கள்படி வரவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி பச்சைநிறம் இட்டுள்ள இடம் கோவிந்தசாமி பெயரில் வருவாய் ஆவணங்கள் வருவதாக சர்வேயர் நீ.ம.சா.ஆ.3ல் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சுந்தரநாயுடு(எ) சுந்தரமூர்த்தி (எ) ஜெனார்த்தன நாயுடு பெயரில் உள்ள கிரய பத்திரத்தில் சொல்லி உள்ள சொத்தின் காம்பவுண்டு சுவரில் தெற்கு சுற்றுசுவரில் கிழக்கு மேற்கு 12-1/2 அடி இடிக்கப்பட்டு இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு இடிக்கப்பட்ட சுற்றுசுவரை என் வரைபடத்தில் நீ.ம.சா.ஆ.2ல்கருப்பு நிறமிட்டு காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

வாதி தரப்பு மறுவிசாரணை-

நான் இரு பத்திரங்களின் அடிப்படையில் தான் சர்வேயர் அளந்து காட்டி அதன் அடிப்படையில் நீ.ம.சா.ஆ.2 வரைபடம் வரைந்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை புல எண் இல்லாமல் ஜக்பந்தியை கொண்டு அளந்தால் விஸ்தீரணத்தில் மாறுபாடு வரும் என்றால் சரியல்ல.

2 மற்றும் 3ஆவது அரசு தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.